தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VII.—No. 11.] MADRAS:—SUNDAY MARCH 11, 288. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

ஞானத்தின்பயன்.
தசாவதாரம்.
கடவுளும், மனிதனும்.
ஓர்முறையீடு.
ஆசாரமர்த்தனம்.
கடிதம்.

ஞானத்தின் பயன்

விவேகத்தில் விதரணையும் கல்வியிற் சம்பனையும் ஒருவன் மூந்தினவனாயிருப்பினும், உலகம் பலவழி, என்பதைக் குறுமொழியாகக்கொண்டு, பிறர் விஷயத்தில் பிரவேசித்து அவர் மொழியும் அபிப்பிராயங்களையும், புரியும் கிருத்தியங்களையும் திருத்தமுயலலொழித்து அடங்கியிருப்பதே உத்தமமென்று சிலர் சொல்லுகின்றனர். உலகத்தின்கண்ணேயுள்ள பதார்த்தங்களை யாராய்ச்சி செய்து அவைகளில நன்மையைச் செய்வன இவையென்றும் தீமையைச் செய்வன இவையென்றும் நன்குணர்ந்து அவ்வுணர்ச்சியின்படியே பதார்த்தங்களை நற்பிரயோசனப்படுத்துவதிலேயே தத்தம் மனோவாக்குக் காயங்களை யுபயோகித்து நடத்துவர் அறிவுடையோர் என்னும் கருத்தை யடக்கியுள்ள "அறிஞர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்" என்னும் நீதிமொழியை இவர் அறிந்திலர்போலும். அறிந்திருப்பரேல் இவர் எங்ஙனம் இவ்வாறு கூறக்கூடும்? உலகமொழுங்குபட்டோங்கவன்றோ அரசுகள்தோறும் மந்திராலோசனை சபையாரென்றும், நியாயாதிபதிகளென்றும் நியமிக்கப்படுகின்றார்கள்? இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் கல்விவான்களும் விவேகிகளுமாகவல்லவா இருக்கின்றனர்? இவர்கள் கல்வியும் விவேகமும் மக்களின் சுகாரோக்கிய விருத்தியை விருத்திசெய்யுமன்றோ? இவையெல்லாம் இவர்களுக்குப் புலப்படாததென்னை? தமக்குத் தெரியாதவிஷயத்தைப்பற்றிப்பேசுவதும் பிறர் நலத்தைப் பேணப் பிரயாசைப்படுபவரை பின்வாங்கச் செய்தலுந்தானா உத்தமம்? உலகம் பலவழியாயிருத்தலினால் பிறர் நலத்தைக் கருதிய பிரயாசை வீண் என்பரேல் அஃது பிழைபடும். உலகம் ஒன்றுபட்டு ஒழுகின் சுகம் மலகுமாதலால் பிரயாசை வேண்டுவதில்லை. அங்ஙனம் ஒன்றுபட்டொழுகாமலும் மக்களின் சுகாரோக்கியம் தாழ்வுபட்டும் வருகின்றமையால் இதுவிஷயத்தில் மிக்கபிரயாசை அதியாவசியகம் என்பதற்கு ஐயம் சிறிதேனுமில்லை. ஆகவே கல்விச்செல்வரும் விவேகிகளுமாயுள்ளவர்களின் கடமை எங்கெங்குமுள்ள துன்பங்களை யோட்டியும் ஆங்காங்கு இன்பங்களை நாட்டியும் வருதலேயாம். கல்வியின் கரையைக் கண்டவராயினும் எவ்விஷயத்தையும் வினாவில் யூகித்தறியவல்லவராயினும் பிறர் நலத்தைப் பேணும் காதலற்றோராயுள்ள காதகரை மதியோம் மதியோம். இவர்கள் கற்ற கல்வியும் பெற்ற விவேகமும், கானலினுங் கடலினும் பெய்த மழையெனப் பிரயோசனத்தை விளைக்கின்றில. ஆகவே கல்வி யென்னும் செல்வியைக் காதலித்து மணந்தும், விவேகமென்னும் சினேகிதனுடன் தோழமை புரிந்தும் உள்ள மகான்களுக்குக் கூறும்பான்மையதியாதெனின்சொல்வாம். சந்திரன், தன்னொளி அவனியில் நிலவாவண்ணம் சிறுமேகங்கள் குறுக்கிடுமேயாயினும் அவைகளுடன் யுத்தஞ் செய்து வெற்றியடைந்தவனைப்போல்வெளிவந்து ஒளியைப் பரப்புகின்றனன். இரவின்கண்ணுள்ள அந்தகாரத்தை நீக்கச் சந்திரனை பிரஜைகள் எதிர்பார்ப்பதும் சந்திரன அவ்வாறே அந்தகாரத்தை அகற்றுவதும், இடையிடையே சிறுமுகில்கள் குறுக்கிட்டு வொளியை மறைப்பதும், அஞ்ஞானிகள் அறிவுடையார்பால் மெஞ்ஞானத்தை விரும்புவதும் விரும்பிய ஞானத்தை அறிவுடையார் அவர்களிடத்தேக யளிப்பதும் இயல்புங் கடனுமாகின்றன. ஆகவே அறியாமையாகிய புற்பூண்டுகளை மக்களின் ஹிர்தயத்தினின்றுங் களைந்து விவேகம் என்னும் ஏர் உழுது கல்வியென்னும் வித்தை விதைத்து இன்பமெனுங் கதிர்வினையக் கொய்வதே சான்றோர் நெறியாகும். இக்கருத்தை யுள்ளடக்கியன்றோ "சான்றோரில்லாத் தொல்பதியிருத்தலின் தேன்றேர் குறவர் தேயநன்றே" என்று கூறியிருக்கின்றது. ஆகவே விவேகிகளும் வித்துவான்களும் பிறர் நலத்தைப்பேண முயலாதிருக்கவும், முயன்றும் காதகரால் தடுக்கப்பட்டுப் பின்வாங்கவும் யத்தனிப்பரேல இவரையும்தேன்றேர்குறவருடன் சேர்க்கலாகும். இவர்கள் மௌனமாயும் தொழிலற்றும் இருப்பரேல் மௌனமாயும் தொழிலற்றும் உள்ள பித்தர்களுக்கும் இவர்களுக்குமுள்ள பேதமென்னை? பேதமில்லாமையினாலன்றோ தொழிலற்ற (நிஷ்டை புரியும்) கற்றவரையும் பித்தரையும் மற்றையர் ஞானிகளென வரையறச் சொல்லுகின்றனர்? கற்றும் பித்தனெனப் பேர் பெறுவதேனோ? இப்பேர் பெறுவதினும் கல்லாமை சால்புடைத்தன்றோ? கல்விவான்களே! விவேகிகளே! வஞ்சகர் வாசகத்திற்குச் செவிகொடன்மின். நற்செய்கையே நுஞ்செய்கையாகக்கொண்மின். இதுவே ஞானத்தின் பயனும் பிரயோசனமுமாம்.

D.

விட்டுணுவின் தசாவதாரங்கள்.

பிருகுருஷியின் சாபத்தினால்விட்டுணு இடைவிடாமல் பூலோகத்திலே பிறக்கும்படி சம்பவித்ததினாலே அவர் மிகுந்த துக்கசாகரத்தில் முழுகி சிவனைநோக்கி தனக்கு வந்த சாபத்தை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ள, பல பிறவியை சில பிறவியாக மாற்றினார். தமது ஒழுக்கத்தினிமித்தம் தமக்கு தண்டனையாகிய பிறவி சம்பவித்திருந்தும், அத்தண்டனையை மறந்து, பூலோகத்தில் எடுத்த பிறவிகளிலும் தமது துன்மார்க்கத்தைவிடாதிருந்ததை அப்பிறவிகள்தோறும் காணலாம். அப்பிறவிகளை அடியிற் காண்க.

1. **மச்சாவதாரம்**—இலங்காசுரன் திருடிக்கொண்டுபோய் சமுத்திரத்தில் ஒளித்த வேதங்களை மீட்பதற்கு, விட்டுணு நூறிலட்சம் யோசனை தூரத்திற்கு நீண்ட மீனாகப் பிறந்தாரெனப் படுகின்றது.

விட்டுணு மச்சாவதாரம் எடுத்தது பிருகுரிஷியின் சாபத்தாலா? இலங்காசுரன் கவர்ந்தொளித்ததை மீட்கும்பொருட்டா? எங்கும் எல்லாம் தானாயிருக்கும் விட்டுணுவிற்கு சாபம் உண்டானதும், ஒத்தென்றும் எழுதாக் கிளவியென்றும் பெயர்பெற்ற அசரீரியாகிய வேதத்தை இலங்காசுரன் எங்குமுள்ள விட்டுணு காணாமல திருடினதும், எங்குமுள்ள விட்டுணு இல்லாத சமுத்திரத்தில் ஒளித்ததும், அதற்காக சர்வ வியாபியாகிய விட்டுணு வரையறைபட்ட நூறிலக்ஷம் யோசனை நீளமுள்ள அறிவிலா மச்ச உருக்கொண்டு அதை மீட்டதும் அற்புதந்தான்.

2. **கூர்மாவதாரம்**—திருப்பாற்கடலைக் கடைந்த தேவரும் அசுரும வாசுகி என்னும் பாம்பு கக்கின விஷத்திற்குப் பயந்து மந்தரமலை என்னும் மத்தையும் கைவிட்டு நடுநடுங்கி யோட, அந்த மந்தரமலை கடலிலே அமிழ்ந்திப்போனதினால், விட்டுணு ஆமை வடிவெடுத்துப்போய் முதுகில் ஏந்திக்கொண்டு வந்தாரென்று சொல்லப்படுகின்றது.

திருப்பாற்கடலைக் கடைந்தபோது வாசுகி கக்கிய விஷத்தைச் சகிக்கலாற்றாது தேவரும் அசுரரும் ஓடினார்களானால் விட்டுணு விஷத்தை அடக்காமல் மலையை ஏந்தினதென்ன? விஷத்தை யடக்கிவிட்டால் அம்மலையை அத்தேவரே ஏந்திக்கொள்வார்களே: திருப்பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் எங்கிருந்து கடைந்தார்கள்? பாற்கடல் கடைபட்டபோது மோர்க்கடலாய்விட்டதுபோலும். விட்டுணு பள்ளிகொண்டது பாற்கடலும் பள்ளிகொள்வது மோர்க்கடலுமா!

3. **வாராகாவதாரம்**—முற்காலத்திலே தேவர்களுக்கு இடுக்கண் செய்த கனகாக்ஷனென்னும் இராக்ஷதன் பூமியைப் பாய்ச்சுருட்டாகச் சுருட்டி, பாதாளத்திலே ஒளித்துவைத்தபொழுது விட்டுணு பன்றி உருவெடுத்துப்போய், அவனையுங்கொன்று பூமியை முன்னையவிடத்திலிருக்கவைத்து, அதன் பின்பு பன்றியாகிய விட்டுணு மலத்தைத்தின்று கொழுத்து பூமியிலுள்ள பெண் பன்றிகளின்மேல் இச்சைகொண்டு, அவைகளுட

னேபுணர்ந்து, நெடுங்காலம் பூமியிலேயே மலத்தின்மீதும் பன்றிகளின்மீதும் இச்சைகொண்டு நின்றுவிட்டார்.

பூமி சுருட்டப்படும் பொருளா? கனகாக்ஷன் எங்கிருந்து சுருட்டினான்? இராக்கதனுக்கு ஆகாரமாகும் பன்றி அன்னோனைக் கொன்றது ஆச்சரியமே:

4. **நரசிங்காவதாரம்**—இரணியன் கையாலறைந்த ஒரு கற்றூணிலே நரசிங்கமாகத் தோன்றி அவனைக் கொன்றாராம்.

தேவராலேயும் மனிதராலேயும் விலங்கினத்தாலேயும் இரணியன் சாவாவரம் பெற்றது உண்மையேல், விட்டுணுதேவு அல்லவென்று கொள்ளவேண்டிவரும், கொள்ளின் இரணியன் இறக்காமலிருக்கவேண்டும்; ஏனெனில் அவன் தேவ வுருவினாலேயும் மனித உருவினாலேயும் இறக்காமலிருக்கவேணுமென்று கேட்காமல் தேவராலேயும் மனிதராலேயும் இறக்காமல இருக்கக்கேட்டுப் பெற்றமையால். இதையே அடியில்வரும் இராமாவதாரத்திற்கும் பொருத்திக்கொள்க.

5. **வாமனவதாரம்**—மஹா பலிச்சக்கரவர்த்தியின் பலத்தை யடக்குவதற்கு ஓர் சிறு உருவங்கொண்டு போய், வஞ்சநெஞ்சுடன் அவனிடத்தில் மூவடி மண்ணிரந்து கேட்டுப் பூமியை ஓடியாக அளந்தாரென்று சொல்லியிருக்கின்றது.

6. **பரசுராமாவதாரம்**—பிரமகுலத்தாருக்கு இடுக்கண்செய்து, அவர்கள் குலாச்சாரங்களைக் கெடுத்த சூரியகுலத்தரசரை சங்கரிக்கும்படி ஜமதக்கினி முனியின் மனைவியாகிய இரேணுகை என்பவள் வயிற்றில் உற்பத்தியாகிப் பிறந்து, அந்தச் சூரியகுலத்தரசரை இருபத்தொரு தலைமுறைவரைக்கும் சங்காரஞ் செய்தாரெனப்படுவதேயன்றி, விசேஷம் ஒன்றுங் காணோம்.

7. **இராமாவதாரம்**—இராவண சங்காரஞ் செய்யும்பொருட்டு தசரதராஜன் புத்திரனாகப் பிறந்து, தன் மனைவியை அரக்கனுக்குப் பறிகொடுத்துக் கலக்கமடைந்து திரிந்து, சுக்கிரீபன முதலிய குரங்குகளின் சகாயத்தினாலும், விபீஷணன் சொல்லிக்கொடுத்த உபாயத்தினாலும், தன் மனைவியாகிய சீதை என்பவளை சிறையினின்று மீட்டாரென்று சொல்லியிருக்கிறது. இராவணன் சீதையைக் கவர்ந்தது அவளுடன் சேரவல்லவா? அவள் அரக்கன் சுவாதீனத்தில் நெடுநாள் தனித்திருந்ததால் இராக்ஷதன் சீதையின் அனுமதியினாலோ அல்லது பலவந்தத்தினாலோ அம்மாதுடன் புணர்ந்திருக்கவேண்டும். இது சிலகாலங்களுக்குப்பின் அவள் நாயகனாகிய இராமனுக்குத் தெரிந்திருக்கவேண்டும்; ஆகையினால்தான் இராமர் கோபங்கொண்டு சீதையை தீயினாற் சுட்டெரித்துவிட்டார்.

8. **பலபத்திராவதாரம்**—சில அசுரரைச் சங்கரிக்கும்படி தேவகியின் வயிற்றில் உற்பத்தியாகி எட்டுமாதமிருந்தபின், மாமனாகிய கஞ்சனுக்குப் பயந்து, இரண்டுமாதம் உரோகணி என்பவளின் கருப்பத்திலிருந்து பிறந்து, அவ்வசுரரைச் சங்காரஞ் செய்ததுமன்றித், தம்பியாகிய கிருஷ்ணன செய்த யுத்தங்களிலெல்லாம் அவருக்குத் துணையாகவும் இருந்தார்.

9. **கிருஷ்ணாவதாரம்**—விட்டுணு தேவகி வயிற்றில் பிறந்து, கெருத்துவன், பிரலம்பன் முதலிய அனேகம் அசுரரையும், க்ஷத்திரியரான அனேக அரசரையும், மாமனாகிய கஞ்சனையும் மைத்துனனாகிய சிசுபாலனையும் வதைத்து, இரதை, விருந்தை முதலான பரதாரங்களுடனே விபசாரஞ் செய்து, இடைச்சேரியிலே தயிர் பால் வெண்ணெய் திருடியுண்டு, உரலுடனே கட்டுண்டு, மத்தால் மொத்துண்டு, அனேக கோபிகாஸ்திரீகளை வசப்படுத்தி, அவர்களுடனே நாணமில்லாமல் துன்மார்க்கமாகப் புணர்ந்து, உருக்குமணி சத்தியபாமை முதலிய அனேக பெண்களை விவாகஞ் செய்து, சராசந்தனுக்குப் பயந்து, வடமதுரையைவிட்டுத் துவாரகாபுரிக்கு ஓடிப்போய், அங்கே பதினெட்டுவருஷம் பதுங்கியிருந்தாரென்று சொலலப்படுவதுமன்றிச், சந்திரகுலத்தரசராகிய துரியோதனாதி நூற்றுவருக்கும், பஞ்சபாண்டவருக்கும் பகையை மூட்டி, யுத்தமுண்டாக்கி, உதிஷ்டிரமகாராஜனைக்கொண்டு பொய் சொல்லுவித்து, பின்பு தனது பிள்ளைகள் சமுத்திரதீரத்திலே விளையாட்டு யுத்தஞ் செய்திறந்த சங்கதியைக் கேள்விப்பட்டு துக்கங்கொண்டு, ஒரு ஆலமர நிழலிலே தனிமையாயிருந்தவேளையில் ஒருவேடன் மானை எய்த அம்பு தவறி அவர்மேல் விழுந்ததினால் இறந்துபோய்க்கிடக்க, அவரது உடலைக் காகங்களும் நரிகளும் தின்றன. அவர் துன்மார்க்கத்திற்கு இவை அனைத்தும் தகுந்த தண்டனையாயின. இத்துன்மார்க்கனையும் கடவுளென்று வழிபடுவது எவ்வளவு பேதைமை.

10. **கற்கி அவதாரம்**—கலியுகாந்தத்திலே குதிரையாக அவதரித்துச் சங்காரம் செய்யும்படி விட்டுணு வருவாரென்று சொல்லியிருப்பதால் அவருக்காக எதிர்பார்க்கிறோம். முந்திய ஜனனங்களில் செய்த துன்மார்க்கத்தைப்போல் கற்கி அவதாரத்திலும் செய்வாரானால், சீர்திருத்தம் அடைந்திருக்கிற இக்காலத்து பிரசைகள் அவரைப்பிடித்து நீதியதிபர்கள்வசம் ஒப்புவிக்க, அவ்வதிபர்கள் அவருக்கு பிராணதண்டனை தீர்ப்பு அளிப்பார்கள்.

தேவ அறிவும், வழிபாடும், அவரவர் வழிபடும் கடவுளுக்குரிய தன்மைகளோடு சம்பந்தப்பட்டிருக்கின்றமையால் தாம் வழிபடும் கடவுள் எத்தன்மையரென அவரவர் மனதில் பதிந்திருக்கின்றதோ அவரவர் ஒழுக்கமும் அத்தன்மையாகவே நிகழும். கடவுள் தீமைகளைச் செயதும், செய்வித்தும், அனுபவித்தும் வருபவரெனக் கொண்டாடினால் அக்கொண்டாட்டமுடையவர்களும் அவ்வித கடவுளைப் பின்பற்றி துர்ச்செய்கையை உடையவர்களாகவே ஒழுகுவார்கள்.

சிலர் தங்கள் நெற்றியில் எவரும்பார்த்து திடுக்கிடும்படியான நாமத்தை தீட்டிக்கொண்டு தெருத்திண்ணையின்மீது உட்கார்ந்து வாயில்வந்தபடி வைணவத்தைப்பற்றி விவகரித்துக்கொண்டிருப்பதைக் கேட்ட அவ்வகுப்பினரான சில வைணவர் அவர்காலில் சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட்டு, அவர்கள் அருகில் உட்கார்ந்து அடியேமுக்கு ஞானோபதேசம் அருள்புரிய வேண்டும் என வேண்டிக்கொளள, அந்நாமதாரிகள் தம்மிடத்திற்கு வந்தவரைநோக்கி அப்பா நாம் சைவம் முதலிய மதங்கள் அனைத்தையும் கண்டித்துவிட்டோம் என பிரதிஷ்டைசொல்லிக்கொள்ளுகிறார்கள். இதுவே அவர்கள்செய்யும் உபதேசம். அப்பிரதிஷ்டர் தங்கள தலையை இத்துடன் உடைத்துக் கொள்வார்களாக.

M. M.

கடவுளும் மனிதனும்.

கடவுளைக் கண்ட மனிதன் யார்? நாமும் மனிதர்கள்தாம். நாம் "கடவுள்" என்னும் சத்தத்தையும் வாச்சியத்தையும் பல உருப்பமைந்த பிரதிமைகளையும் கண்டு கேட்டிருக்கின்றனமேயல்லாமல் அச்சத்தத்தாலும் வாச்சியத்தாலும் உருக்களாலும் சுட்டப்பட்ட மூலபொருள் உண்டோ இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனால் நம்மில் அனேகர் அத்தகைய பொருள் உண்டென்றும் அதை நம்புதல் வேண்டுமென்றும், நம்பாதொழியின் அதனால் கேடு பல சம்பவிக்குமென்றும், வாக்காலும் சுருதியாலும் பலகால் வற்புறுத்தியிருக்கின்றார்கள். இங்ஙனம் நம்மைப் பயப்படுத்தும் இவர்கள் அக்கடவுட் டன்மையை ஐயந்திரிபற உணர்ந்திருக்கின்றார்களா வென அன்னோர் வாககையுஞ் செய்புளையுங்கொண்டு ஆராயுழி, அவர்கள் கியானம் நம்மதிலும் ஓர் திலப்பிரமாணமேனும் சிறந்ததாகத் தெரியவரவில்லை. ஒன்றுக்கொன்று பரஸ்பரவிரோதமாகிய பல வாசகக் குழுக்களைப் பொதிந்தொரு நூலாக்கி வைத்திருக்கின்றார்களேயல்லாமல், நிராக்ஷேபமாய் இரண்டுவரியேனும் எழுதினார் இல்லை. இவர்களால் கூறப்படும் கடவுளிருப்பது உண்மையும் அவர் அனுக்கிரகசத்தராவது வாஸ்தவமுமானால், இவர்கள் செய்யும் பிரார்த்தனையெல்லாம் கைகூடிவருகின்றனவா? வருகின்றனவேல், கடவுள் விசுவாசிகளாகிய ஆஸ்திகருக்குக் கைவல்லியமாகாத சித்தியொன்றில்லை யல்லவா? இங்ஙனமேல், பஞ்சத்தால் பல தேசத்தவர்கள் பதைபதைப்பதும் பிணியாதிகளால் பிரஜைகள் பீடிக்கப்படுவதும், வறுமையால் வாழ்வுகுன்றி வதையுறுவதும், தீ, பிரவாகம், இடி, பூகம்பம், அதிவிருஷ்டி, அனாவிருஷ்டி, கொள்ளைநோய், முதலிய உற்பாதங்களால் கோடானுகோடி சனங்கள் வாட்டமுற்று கேட்டை யடைவதும் ஏன்? உலகத்திலே நடை பெற்றுவரும் பலவர்த்தகங்களினும் வியவகாராதிகளினும்பொய் சூது வஞ்சகம் களவுமுதலிய நிஷேத கிரியைகளைப் பெரும்பாலார் புரிந்துவருவதேன்? இவர்களுக்கு உண்மையாகவே கடவுள் விசுவாசமும் பயமு மிருப்பின், கடவுளால் வெறுக்கப்பட்ட னவெனக் கூறும் கொடிய செய்கைகளைப் புரிய அஞ்சார்களா! இவர்கள் அனுபவத்தையொட்டி ஆராயுமிடத்தும், இவர்கள் ஒரு இறைவனுக்கு அஞ்சி நடப்பவர்களாய்க் காணப்படுகின்றிலரோ. சும்மாவாய்ச் சொல்லிற்குப் பஞ்சமில்லையென்று "கடவுளுண்டு, கடவுளை விசுவசித்தல்வேண்டும், கடவுள் விசுவாசிகளல்லாதார் கொடுமைகளைச் செய்ய அஞ்சார்; அவர்களுக்கு தீராத நரகவேதனை கிடைக்கும்" என்று கூறுவது வீணல்லவா? சிவாலயங்களினும் சைவமடங்களினும் உள்ள பண்டாரங்களென்ன, குருக்கண்மாரென்ன, தம்பிரான்மாரென்ன; விஷ்ணுவாலயங்களிலும் வைணவமடங்களிலும் உள்ள ஜீயர்களென்ன, ஏகாங்கிக

ளென்ன, மகந்துக்களென்ன; அத்வைத மடங்களிலுள்ள பிரம்மங்களென்ன, சுவாமிகளென்ன, யோகீஸ்வரர்களென்ன, இவர்களுடைய திருமேனியைக் காணும்போதே சாதாரண சனங்களுக்கு தேகம் மயிர்க்கூச்செறியத்தக்க அவ்வளவு காந்தியும் காவிவேட்டியும் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லும் சடைமுடியும் திரிதண்டமும் துவாதசநாமமும் துளபமணியும் மிதியடியும் சிஷியகூட்டமும் தீர்க்கவாசகமும் உடையோர்களாய் நடிக்கின்றார்களன்றே? இவர்களில் அனேகர் தேவாலய சம்ரக்ஷணையின்பொருட்டும் நித்திய நைமித்தியங்களின்பொருட்டும் அதிதி பூசையின்பொருட்டும் வைக்கப்பட்டுள்ள திரவியங்களையும் விடப்பட்டுள்ள மானியங்களையும் சூதாட்டங்களினும் வியபிசாரங்களினும் சதிர்கச்சேரி நாட்டியத்தின்பொருட்டும் குதிரைப் பந்தையம் கோழிப்பந்தையம் முதலிய துர்வினியோகங்களில் அழித்தும் தங்கள் சொந்தபந்து மித்திரர்களின்பொருட்டுச் செலவழித்தும், வியபிசாரிகளுக்குக்கொடுத்தும், கோர்ட்டு கச்சேரிகளில் துர்வழக்கு தொடுத்தும் அதிகாரிகளுக்குப் பரிதானங்கொடுத்தும் பொய்ச்சாட்சிகளுக்கு இலஞ்சம் சமர்ப்பித்தும் அபராதங்கள் இறுத்தும, கோயிற்பூனை அபிஷேகப்பாலைச் சாப்பிட்டுவருவதுபோல் இக்கோயிற் பெருச்சாளிகள் கோயில் திரவியத்தையெல்லாம் கொள்ளையிட்டுச் சூறையாடிவருகின்றனரே; இவர்களுக்குக் கடவுள் நம்பிக்கையும் தெய்வவிசுவாசமு முண்டா? இவர்களும் ஆஸ்திகர்தாமா? இத்தகைய கொடியர்களையும் கடையர்களையும் மடையர்களையும் இழிஞர்களையும், அவர்களது வெளிவேஷத்தைக்கண்டு "சுவாமி சுவாமி" என்று கும்பிட்டு நடுநடுங்கும் நமது இந்துக்கள், நெஞ்சை யொளிக்காது வார்த்தையாடிவரும் சுவஞானிகளைத் தூஷிப்பது ஓர் ஆச்சரியமா? தற்காலம் சில இந்து பாலிசர்கள் ஏற்பட்டு கிறீஸ்தவர்கள்போல சந்தைக்கூட்டங்களினும் தெருக்கோடிகளினும் மைதானவெளிகளினும் புறச்சமயங்களைத் தூஷித்தும் புறமதத்தினைப் பழுதுசொல்லியும் வருகின்றனரே? இவர்கள் இங்ஙனம் செய்வதைவிட தங்கள் சுயமதத்தை யதஞ்செய்து கோயிற்பொருளைத் துர்வினியோகம்புரிந்து பத்தியைக் கத்திகொண்டு வெட்டிக் கோயிலைக் குட்டிச்சுவராக்கும் மேற்சொன்ன கோயிற் பெருச்சாளிகளையும் மடப் பூனைகளையும் கண்டித்துப் புறப்படுத்தி அப்பொருள்களைப் பொதுநன்மைக்குச் செலவிடும்படிச் செய்வார்களேல் எவ்வளவு பிரயோசனகரமாகவிருக்கும். இதைவிட்டுத் தொண்டையும் மண்டையும் போம்படிக் கூச்சலிட்டுப் புறமததூஷணம் செய்வதில் தம்மதம் நிலைபெற்றுவிடுமோ! சுமார் அன்பது அறுபது வருஷகாலமாக இங்ஙனம் செய்துவந்த கிறீஸ்தவர்கள் இதுகாறும் யாது பயனடைந்தார்கள்? ஒன்றுமில்லையாதலாலும் இதுகாறுங் கடவுளைக் கண்டாரும், கண்டாரைக் கண்டாரும் ஒருவருமில்லை யாதலாலும், அம்பரத்திற்கு ஏணியிட்டு ஆகாயத்தாமரைகொய்வதைவிட்டு ஜனனுகூலமும் மிகப் பிரயோசனமுமான விஷயங்களைத்தொட்டு உலக நன்மை புரிந்துவருவதே சர்வ சிரேஷ்டம்.

ஓர்முறையீடு.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர், எச்-ஏ-ஆல்பட் (H. A. Allbutt) என்னப்பட்ட பண்டிதர் மனைவிகைப்புத்தகம் எனப் பெயரிய (Wife's hand book) ஓர் இங்கிலீஷ் புத்தகம் ஏழைச்சனங்களுக்கு உபயோகமாதற்பொருட்டு பிரசுரம் செய்தார். அப்புத்தகத்தில் கண்டிருக்கிற விஷயங்கள் எளிதில் கவனிக்கக் கூடியவையாயும் எளிதில் அநுசரிக்கத்தக்கவையாயும் மிகு உபயோக கரமாயும் இருந்தமையான் அதன் விலையாகிய அணா 8 கொடுத்து அனேகர் வாங்கி வாசித்தார்கள். அப்புத்தகம் இலக்ஷக் கணக்காய் செலவாய் விட்டன. இதனால் ஸ்திரி புருஷாளுக்கு விளையும் பிரயோசனம் இவ்வளவவ்வளவல்ல, இப்புத்தகம் Fruits of philosophy (தத்துவ சாத்திரபலம்) Law of population (பிரஜாநிரூபணசாரம்) முதலியவற்றைப்போன்றது. இதில கருப்பிணிகள் ஒழுகவேண்டிய விதமும், உண்ணவேண்டிய உணவும், உண்ணவேண்டிய காலமும், புத்தரோற்பத்தி பெறவேண்டியபோது பெறவும் பெறவேண்டாத போது நிறுத்திவிடவும், எத்தனை பிள்ளைவேண்டுமோ அத்தனை பெறவும் வேண்டாதபோது நிறுத்திவிடவும் கூடிய வைத்திய சாத்திர விதிகள் தெளிவாய் கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இந்நூல் பஞ்சத்திற்கோர் காரணமாகிய பிரஜாபிவிர்த்தியையும் பிரஜாபிவிர்த்திக்குக் காரணமாகிய மிதமிஞ்சிய புத்திரப்பேற்றையும் தடுப்பதற்கு ஓர் பிரதான கருவியாகின்றது. இதனைக்கண்ட இங்கிலாந்திலுள்ள பிரதானியரான சில டாக்ட்டர்மார்களை இப்புத்தகத்தை வெளியிட்டு வைத்திய ரகசியங்களை பயிரங்கப்படுத்தினமையால், இதை ஆக்கியோனாகிய டாக்டர் எச்-ஏ-ஆல்பட் என்பவரை வைத்திய சங்கத்தினின்றும் தள்ளிவிட்டார்கள். இதற்காக அவர் கோர்ட்டில் அவர்கள்மீது வழக்கு தொடுக்கப்போகிறார். அதற்கு சுமார் 4300–ரூபாய் செலவாகுமாம். ஆதலால் உண்மையை ஊர்ஜிதப்படுத்த ஊக்கமுடைய மகான்கள் தங்கள் தங்களால் இயன்றபொருளுதவி செய்து அவர் தம்முயற்சியில் செயம்பெறச் செய்யும்படி பொது ஜனங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றார்.

பணம் அனுப்ப விருப்பமுடையோர், அடியிற் கண்டிருக்கிற அந்தப் பண்டிதருககனுப்பினும் அனுப்பலாம், அல்லது செகுலர் சோசைட்டி செக்ரிட்டேரி மெஸ்டர் அப்ஷன் துரைக்கனுப்பினும் அனுப்பலாம்.

எச்-ஏ-ஆல்பட்.
H. A. Allbutt, MRC. PE, LS. A.
14 Park. Square, Leeds. London.

ஆசாரமர்த்தனம்.

இந்துக்களென வழங்கு மாரியர்க்குள் பன்னாள்தொட்டிந்நாள்மட்டும் வழங்கிவரு மாசாரங்களிற் சிற்சிலவற்றை யொருவாறு கவனிக்கப்புகுவாம். என்னெனின்—

பிரஹ்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, பஞ்சம ரீமுக ஐந்து வர்ணங்களு மவற்று ளெத்தனையோ பிரிவுகளு மிருப்பதைக்கண்டு வருகின்றோமல்லவா. அவ்வச் சுஜாதியிலேயே யொருவரை யொருவர் சில சமயங்களில் சூதகமென்றும், தீட்டென்றுந் தீண்டாமலிருப்பதையு மறிவோமல்லவா. அன்றியும் பிராஹ்மணாதி யுயர்குலத்தோரெனப்படுவோர் மற்ற விழிகுலத்தோரெனப்படுவோரைத் தீண்டும் பழக்கம் பட்டணஸ்தானங்களில் சிறிது சஹஜமாயிருந்தாலும், நாட்டுப்புறங்களில் பிராஹ்மணாள் நீசஜாதிகளைச் செய்யும் நிர்ப்பந்தங் கொடிது கொடிது, மிகக்கொடிது. திருஷ்டாந்தமாய்ப் பறைய னொருவழியே போய்க்கொண்டிருக்கும்போது பிராமணனொருவனெதிர்ப்படுவனாயின், அப் பறையனைத் துரத்துகின்றான். அவனுக்கு வழியைவிட்டுப் பாட்டையின் பக்கங்களிற் சென்று மீண்டு மவ்வழி நடக்கச்சே, வேறொரு மறையோன் வருவனாயினவனுக்கு மப்படிச் செய்யவேண்டும். இங்ஙனே யப்பறையனென்ன அவசரமாக வந்தவனாயிருந்தபோதினும், துஷ்ட மிருகங்களைக் கண்டு தூர நிற்றல்போலிருந்தே தொலைக்கவேண்டியதாயிருக்கிறது. கட்டாயமாய் நடந்தேறிவருமிந்நிர்ப்பந்த வநீதத்தைக் கண்டு மனஞ்சகியாதெழுதுமிச்சில வரிகளை யொவ்வொரு வருணத்தாரும் நன்கு கவனிக்கக் கோருகின்றனம்.

நாம் வசிக்குமிக்கோளம் மேலுங்கீழுமநேகதூரபரியந்தம் வாயுமண்டலத்தாற் சூழப்பட்டிருப்பதை யறியாதாரில்லை. அன்றியும், தவழ்வன, நெளிவன, ஊர்வன, நீந்துவன, நடப்பன, பறப்பன முதலிய வெண்ணிறந்த ஜீவகோடிகளாற் சூழப்பட்டிருப்பதையுங் காணாதாரருமை. மேலு மொவ்வொரு பிராணியையும் வாயுமண்டலங் கவர்ந்துகொண்டிருப்பதும் சாதாரணம். அவ் வாயுமண்டலம் நம்மைச் சூழ்ந்திராதபட்சத்தில் நாம் ஜீவித்திரோமென்பது மநுபவம். இதனால் வாயு நமக் கின்றியமையாச் சாதநமென்று வெட்டவெளிச்சமாகின்றது. ஒவ்வொருஜீவனு முஸ்வாஸம் நிஸ்வாஸஞ்செயவது சஹஜமென்பது மறைப்பல்ல. உஸ்வாஸமென்பது வாயுவை யுட்கொள்ளல், நிஸ்வாசமென்பது வாயுவை வெளிவிடல். அவையிரண்டிற்குந் தாரதம்மியமுமுண்டு. அதாவது உட்கொள்ளும் வாயு பிராணாதாரமான சுத்தவாயு. வெளிவிடும் வாயுவோ விஷமுள்ளது மசங்கியமானதும். எப்படியென்றால்—நாம் உஸ்வாசிக்கும் பிராணவாயு சரீரத்துட் சென்று மீண்டும் வெளிவரும்போது முன் தன்மை மாறி விஷத்தன்மையைப் பொருந்தி கரியமில வாயுவெனும் பெயரை யேற்கின்றது. திருஷ்டாந்தமாய், நம் சரீரமே யொரு பாத்திரமாகவும், உட்கொள்ளும் வாயுவே ஜலமாகவும், அவ் ஜலத்தா லப்பாத்திரத்தைக் கழுவியூற்றிய வச்சலம்போல, நமது நிஸ்வாஸம் கரியமில வாயுவாகவு மிருக்கின்றது. இப்படியே யிப்பிரபஞ்சத்திலுள்ள ஜீவகோடிகளி னுஸ்வாஸமென்றுணரக்கடவோம். அவ் நிஸ்வாசக் கரியமில வாயுபிராணவாயுவுடனே கலந்துதானிருக்கின்றது. இவை யிரண்டுமாத்திரமன்று, உப்பு வாயு, நீராவி யிவைகளுஞ் சேர்ந்தே வியாபகவாயுவாயிருக்கின்றது. ஜீவகோ

டிகள் நிஸ்வாஸிக்கும் வாயு தாபரங்களுக் குணவாயுமிருக்கின்றது. தாபரங்களோர்வகை நிஸ்வாசஞ் செய்யும் வாயுவோ பிராணவாயுவானதாலது நமக் குஸ்வாஸாஹார மாகின்றது. இஃதிம்மட்டிருக்க.

வேதியராதி யைந்து வருணத்தாருடன், சகல ஜீவஜெந்துக்களினின்றுஞ் சதா கழிந்துகொண்டிருக்குங் கரியமில வாயு தாவரங்கட்குணவாயிருந்தபோதினும், சிரேஷ்ட ஜாதிமுதல், கநிஷ்டஜாதிபரியந்த மொவ்வொரு ஆணும் பெண்ணும் அதனைப் பிராணவாயுவுடன் சேர்த்துட்கொள்ளுகின்றனரெனபதிலாட்சேபமில்லை. அன்றியும் சர்வ பிராணிகளின் சரீர ரந்திரங்களினின்று மிடைவிடாமல் கழிந்துகொண்டிருக்கும் கரியமிலவாயு ஷை பிராணவாயுவுடன் சேர்ந்தெங்கும்வியாபித்திருக்கின்றதென முன்னமே சொல்லியுமிருக்கின்றோம். அவ்வியாபகவாயுவான சமுத்திரத்தில் நாம் மச்சங்களைப்போல் வாசம் பண்ணுகின்றோம். ஜலவாசஞ் செய்யு மச்சங்களைச் சதாவச்சலம் ஸ்பரிசித்துக்கொண்டேயிருக்குமாறு, வாயுவில் வாசஞ் செய்யும் நம்மையு மவ்வாயு சதா ஸ்பரிசித்துக்கொண்டிருக்கின்றது பிரத்தியட்சம்.

மனுக்குலத்தில் சிரேஷ்ட கநிஷ்டங்களாகிய ஜாதிகளெத்தனையிருந்தபோதினும் அப்படியே இதர ஜீவன்களி லெத்தனை வகுப்பிருந்தபோதினும், அத்தனை பிராணிகளின் கரியமிலவாயுக்களும் பிராணவாயுவுடன் சேர்ந்து பிராமணராதி பஞ்சமரீறாக சதாஸ்பரிசித்துக்கொண்டிருக்க, ஒருவனை யொருவர் தீண்டப்படாதென்கிற நியமமென்ன !

உத்தியோகஞ்செய்யு மாபீசுகளிலும், கல்விச் சாலைகளிலும், மஹாசபைகளிலும், தேவாலயங்களிலும் மற்றவிடங்களிலும், இன்னும்நாமெங்கிருந்தாலும், சர்வஜாதிபிராணிகளினின்றுஞ்சதா புறப்பட்டுக்கொண்டிருக்குங்கரியமிலவாயுவானது பிராணவாயுவுடன்சேர்ந்துநம் சரீரத்தை ஸ்பரிஸித்துக்கொண்டிருப்பதுடன், உஸ்வாசிக்கும்போதுள்ளேயுஞ் செல்கின்றது. இதுவே நாமொருவரெச்சிலை யொருவருண்பதற்குச் சமானமாகின்றதல்லவா ?

இதனால் சிரேஷ்டஜாதிமுதல் கநிஷ்டஜாதிவரையில் ஒருவரெச்சிலை யொருவர் சதா வுண்டுகொண்டிருக்கின்றாரென்றும், ஒருவரையொருவர் சதா தீண்டிக்கொண்டேயிருக்கின்றாரென்றும் பிரத்தியட்சானுபவமாய் விளங்க, ஒருவனையொருவர் தீண்டப்படாதென்றும், ஒருவரெச்சிலை யொருவர் தின்னப்படாதென்றும் நம் இந்துக்களில் நெடுநாளாய் வழங்கிவருங் காரணமென்னே !

ஒருகால் நாமெடுத்துக் காண்பித்த நியாயம் சூட்சுமபதார்த்தமென்று நழுவவிட்டிருக்கின்றார்கள்போலும். நம்மவர்கள் கண்ணுக்குப் புலப்பட்டுக்கொண்டிருக்குந் தடி பதார்த்தமாகிய சரீரமுதலியஸ்தூல பதார்த்தங்களைத்தான் நம்புவரோ? அங்ஙனேயாகட்டும். ஆனால், ஸ்தூல பதார்த்தங்களெங்கிருந்து அல்லதியாதனாலாயினவெனக்கருதிக்கொண்டிருக்கின்றார்களோ! சகலஸ்தூலபதார்த்தங்களும், சூட்சும பதார்த்தங்களாகிய அணுக்குழுசையோகமென் றுணர்ந்திலையோ ? அந்தோ ! சூட்சுமத்தையன்றி ஸ்தூலமுண்டா ? இல்லையென்றறிந்தக்கணமே, சூட்சுமமே ஸ்தூலபதார்த்தத்தின்காரணமென்றாகின்றதன்றோ! ஆகவே, சூட்சுமமே ஸ்தூலமென்றும், ஸ்தூலமே சூட்சுமமென்றும் கைக்கனிபோல விளங்க, இச்சூதறியா வந்துக்கள் தடியாகிய ஸ்தூலம், தடியாகிய மற்றொரு ஸ்தூலத்தைத் தீண்டுதல்தான் தீண்டலென்றும்; ஷை தடியாகிய ஸ்தூலம் மற்ற தடிகளாகிய வுணவுகளை யருந்துதலே யுண்ணலென்றுங் கொண்டிருக்கும்பிராந்திக்கிஃதோர் நன்மதிச்சுடராயிருக்குமென வுன்னுகின்றனம். ஆகையாலினியேனு மிந்துக்களுள் சிரேஷ்டஜாதியெனப் பறையடித்துத் திரியும் பல்லோர், மற்றவர்களைக் கநிஷ்டஜாதியென மதித்து நிர்ப்பந்தத்துட்படுத்தா திருப்பரெனக் கருதுகின்றனம். வாயுவிஷயமிம்மட்டிருக்க.

இனி ஜலத்தை யொருவாறு சிந்திக்கப்புகுவோம். ஜலத்திலிடமாகச் சற்றேறக்குறைய நிலத்திலுள்ள ஜந்துக்களெல்லாமிருக்கின்றன. என்றாலும் நாம் பானம்பண்ணும் ஜலத்திலே மச்சங்கள், தவளைகள், நண்டுகள் இன்னும் சில பூச்சிகளேனும் வசியாதில்லை. ஆனால் கண்ணுக்குப் புலப்படா வநேக நுட்ப ஜந்துக்கள் நீரிலே சாதாரணமாயுண்டு. அன்னவைகளெச்சிலும், அமேத்தியமும், பறவைகளெச்சமும் பலவகையழுக்கும் மனிதர் எச்சிலுங் கலவாத ஜலமருமை. அதை நாம் அருந்துகின்றோம். அஃதே பிறரெச்சிலைத் தின்றதற்கு நிகராகின்றதல்லவா? அன்றியும் ஷை ஜலத்தில் ஸ்நானஞ் செய்கின்றோம். அதுவே பிறனைத் தீண்டுதற்குச் சமனாகின்றது.

ஆகலால், இந்துக்களொருவனையொருவர் தீண்டப்படாதென்பரேல் வாயுவில்லாஸ்தானத்தில் வசிக்கவேண்டியதும், ஒருவரெச்சிலை யொருவர் தின்னப்படாதென்றாலோ உஸ்வாஸ நிஸ்வாசமேயற்றிருக்கவேண்டியது மின்றியமையாக் கடனாகும். அன்றியுந் தீண்டப்படாதென்போர் ஜலஸ்பரிஸமே செய்யாமலும், எச்சில் தின்னப்படாதென்போர் ஜலபானமே பண்ணாமலுமிருக்கவேண்டியதை விடுத்து, வாயுவுள்ளஸ்தானத்தில் வாசஞ் செய்தும், ஜலபானம் பண்ணியுமிருப்பது "சாறுவேண்டாம் தெளிவில்வாரு" என்றதற்கும்; "அவன் கெட்டான் குடியன் எனக்கிரண்டுதிராம்போடு" என்பதற்கும் சமனேயன்றி வேறென்னாம். இதை யறிந்துதான் முன்னோர்கள், ஜலம் ஜீவகோடிகளுக்குப் பிராணாசாரமாகையால் அதற்குத் தீட்டில்லை தோஷமில்லையென் றேற்படுத்தியிருக்கலாம். நியாயங்களிவ்வாறிருத்தலால்,

ஓ, ஓ, எனதன்பார்ந்த இந்துக்களே ! ஆசாரமுடைய அபிமானிகளே !

நீங்களாகாய சஞ்சாரஞ் செய்ய முயன்றபோதினும், உங்களாசாரமனைத்து மநாசாரமாகுமென்று திண்ணமாயெண்ணுங்கள். வாயு, உதகமிரண்டுமற்ற விடங்களிற் சஞ்சரித்து, எவ்வித பதார்த்தங்களையு முண்ணாதொழிபவரே ஆசாரமுடையோராவர் என்று நமது புத்திக்குப் புலப்படுகின்ற நியாயானுபவத்தைக் கருணையுடனுங்களுக் கறிவித்தோம். இந்நியாயத்தை நுங்களால் நீசரெனப்படுவோர் அறிவார்களானால் நுங்களாசாரமும் சிரேஷ்டத்வமும் என்னகதியாகுமென்று நீங்களே கருதக்கடவீர்கள்.

இனி யாசாரமுடையோரெல்லா மூச்சுவிடாமலும், வாயுவுள்ள ஸ்தானத்தில் வசியாமலும், ஜலபானம் பண்ணாமலும், ஸ்தானஞ் செய்யாமலுமிருக்க முயல்வார்களென்று நம்புகின்றனம்.

கிருஷ்ணகிரி உண்மைவிரும்பி.

கடிதம்.

ஓம்.

உண்மை யுரைத்தல்.

கிருஷ்ணகிரி உண்மைவிரும்பியே.

1. நாஸ்திக சித்தாந்தமே சரியென்று தத்துவவிவேசினியில் எழுதிக்கொண்டு வருபவராகிய நீங்கள் முன்வந்திருந்தபோது சின்னசாமி பிள்ளை என்று சொல்லிக்கொண்டு நாஸ்திகமத சித்தாந்தமுள்ளவராகவே நடித்துக்கொண்டிருந்துபோனீர்.

2. முன் சென்னையிலிருந்த ஸ்ரீமத் சச்சிதானந்த பிள்ளை அவர்கள் அத்துவித சித்தாந்தத்தை தத்துவ விவேசினியில் கண்டித் தெழுதிய நீங்கள் இப்போது வந்து சிதாகாச சுவாமியென்று சொல்லிக்கொண்டு அத்துவித சித்தாந்தமே சிறந்ததென்று நடித்துக்கொண்டிருக்கிறீர்.

3. கிறிஸ்துமத சித்தாந்தத்தை சிதறும்படி தத்துவ விவேசினியில் கடிதங்க ளெழுதிக்கொண்டு மிருக்கு நீங்கள் இன்னொருதரம் வரும்போது உங்கள் தாய்தந்தை மதமாகிய கிறிஸ்துமத சித்தாந்தமே சிறந்ததென்று நாட்டுகுருவாய் வருவீர்போலும். இந்தப்பிரகாரம் வேளைக்குத் தகுந்த வேஷம்போடும் நிலையிலலா குணங்களையுடைய நீங்கள் கிறிஸ்துமத யானை என்னும் தலைப்பின்கீழ் எழுதியிருக்கும் சத்வாக்கியங்களை கிரகித்து நடந்துகொள்ளாமல், அதின்பேரிலும் சமயங்களில் சிரேஷ்டமாகிய பிரம்மக்கியானபோதினி கருத்தின்பேரிலும் தத்துவவிவேசினி பத்திரிகையில் மதாவேசி வாய் மனம்போனபடி எழுதினீரல்லவா ? அது கிருஷ்ணகிரியின் தன்மைபோலும். இனிமேல் சுப்பிரகிரியிலேறி அதை இன்னொருதரம் சாந்த குணத்துடன் வாசித்து யோசித்தால் அதிலிருக்கும் உங்கள் குற்றங்களை நீங்களே தெரிந்துகொள்ளலாம். மேலும் தத்துவவிவேசினி பத்திராதிபரவர்களும் பிரம்மக்கியான போதினி பத்திராதிபரவர்களும் முக்கியவிஷயங்களைப்பற்றி ஒருவருக்கொருவர் வினாவிடைகளெழுதியிருப்பதை படித்துககொள்வீரானால் வினாவிடைகளெழுதும் மரியாதைகளை நீங்கள் தெரிந்துகொண்டு சீர்பெறலாம்.

பெங்களூர். } இங்ஙனம்:
4—3—88 } இந்துநேசன்.

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.